

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 24 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 17 – திங்கள்கிழமை 02 செப்டம்பர் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 24 : Thiruvalluvar Year - 2055 - Aavani 17 - Monday 02 September 2024 - Chennai 12 Pages ₹ 5.00


## இந்தியாவின் 2வது பெரிய பொருளாதார மாநிலமாகத் திகழ்கிறது !

# தமிழ்நாடு, அமெரிக்காவை ஈர்த்து வருகிறது!

## சான்பிரான்சிஸ்கோவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சான்பிராஸ்சிஸ்கோ, செப்.2-**

**இந்தியாவின் 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றும் தமிழ்நாடு, அமெரிக்காவை ஈர்த்து வருகிறது என்றும் பெருமிதம் பொங்க அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 31.8.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:-

முதலில் நானும் எனது துணைவியாரும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த போது, பறைஇசையுடனும், திருக்குறள் பாடல்களுடனும் வரவேற்பு வழங்கியமைக்காக எனது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சான் பிரான்சிஸ்கோ என்ற ஊரில் இருக்கிறேனா, சென்னையில் இருக்கிறேனா என்று சந்தேகப்படுகிற அளவிற்கு, தமிழ்நாட்டில் இருக்கிற உணர்வையே எனக்கு நீங்கள் இப்போது ஏற்படுத்திவிட்டீர்கள். இப்படிப்பட்ட அன்பான வரவேற்பு சந்திப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கிற இந்தியத் துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.8.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சான்பிரான்சிஸ்கோவிற்கான துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, அமெரிக்க வாழ் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எப்போதும் சிரித்த முகத்தோடு அன்பான வார்த்தைகளையே பேசுகிறவராக இந்தியத் துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி அவர்கள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

**இந்தியா வம்சாவளி மக்களால் எனக்குப் பெருமை!**

உலகின் மூன்றாவது பெரிய நாட்டிற்கு நான் வந்திருக்கிறேன். 1971ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அவரது மகனான நானும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு இப்போது வந்திருக்கிறேன். உலகின் மதிப்பு மிக்க அமெரிக்க நாட்டில் வாழுகின்ற இந்திய வம்சாவளி மக்களான உங்களை பார்க்கும்போது எனக்குப் பெருமையாவும், மகிழ்ச்சியாவும் இருக்கிறது.

இத்தனை இந்திய முகங்களை இங்கே பார்க்கும் போது இந்தியாவில் ஏதோ ஒரு மாநிலத்தில் இருக்கிற மாதிரிதான் எனக்கு இருக்கிறது. அமெரிக்காவில் இருக்கிறேன் என்று தோன்றவில்லை. உலகத்தில் எந்த நாடாக இருந்தாலும் அது இந்தியர் இல்லாத நாடாக இருக்காது. இந்தியர்கள் வாழுகிற நாடாகத்தான் உலகின் எல்லா நாடுகளும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, அமெரிக்கா என்பது இந்தியர்களை ஈர்க்கிற நாடாக எப்போதுமே இருந்திருக்கிறது.

நியூயார்க், நியூஜெர்சி, வாசிங்டன், சான் பிரான்சிஸ்கோ, சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், பால்ட்டிமோர், பாஸ்டன், டாலஸ், ஹியூஸ்டன், பிலடெல்ஃபியா, அட்லாண்டா இப்படி அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீங்கள் வசித்து வருகிறீர்கள். சில பேரை நான் குறிப்பிட மறந்திருக்கலாம். இப்படி பரந்து விரிந்த அமெரிக்கா முழுமைக்கும் தமிழர்கள் பரந்து இருக்கிறார்கள். பல்வேறு மொழிகளைச் சேர்ந்த இந்திய இன மக்கள் இருக்கின்றீர்கள். பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு இருக்கின்றீர்கள். தொழில் முதலீடுகளை ஈர்க்க நான் வந்திருந்தாலும், என் இனிய இந்திய சொந்தங்களின் முகங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்கு தான் நான் இப்போது இங்கு வந்திருக்கிறேன்.

நம்முடைய இந்தியாவும், நீங்கள் இருக்கக்கூடிய அமெரிக்காவும் உலகில் இருக்கக்கூடிய மிக முக்கியமான நாடுகள். இரண்டுமே ஜனநாயக நாடுகள். உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக அமெரிக்கா இருக்கிறது என்றால், ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா இருக்கிறது.

### தமிழ்நாட்டில் முதலீடு செய்ய தூண்ட வேண்டும்!

**‘கடந்த 3 ஆண்டுகளாக அதிகமாக அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நேரில் அழைக்கத்தான் நான் வந்திருக்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்களை தூண்ட வேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.’**


தொடர்ச்சி 3ஆம் பக்கம்




## தி.மு.க. பவள விழா ஆண்டு

# தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்!



★★★

2024ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் தி.மு.க. பவள விழா ஆண்டு **கழக முப்பெரும் விழா**வினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான

**பெரியார் விருது**



திருமதி. **பாப்பம்மாள்** அவர்கட்கும்

**அண்ணா விருது**



திரு .அறந்தாங்கி **மிசா இராமநாதன்** அவர்கட்கும்

**கலைஞர் விருது**



திரு.**எஸ்.ஜெகத்ரட்சகன்** அவர்கட்கும்

**பாவேந்தர் விருது**



கவிஞர் **தமிழ்தாசன்** அவர்கட்கும்

**பேராசிரியர் விருது**



திரு.**வி.பி.இராஜன்** அவர்கட்கும் வழங்கப்படும்.

**நாள் : 01.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**